செ. வெ. எண் :- 204 நாள் :- 04/03/2010

## புத்திரிக்கை செய்தி

# மருத்துவத் தாவரங்கள் மற்றும் மூலிகை மருந்துகள் குறித்த பன்னாட்டு கருத்தரங்கம்

(மருத்துவத் தாவர வளர்ப்பிலுள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள், முறைபட்ட பயன்பாடு மற்றும் பாதுகாப்பு)

நிகழ்விடம் : **பச்சையப்பன் கல்லூரி, சென்னை.**
நாள் : **4-6 மார்ச் 2010.**

பன்னாட்டு கருத்தரங்கில் மூலிகை மருத்துவம், மருத்துவத் தாவரங்களின் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள், தீர்வுகள் குறித்து பல்வேறு நாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலுள்ள அறிவியல் அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், மூலிகை மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்தாலோசிக்க உள்ளனர்.

**விழாப்புத்தகத்தை வெளியிடுபவர் மற்றும் தலைமை உரை**
**டாக்டர். ஐசரி.கே. கணேஷ், தலைவர்,**
பச்சையப்பன் அறக்கட்டளை மற்றும் வேந்தர், வேல்ஸ் பல்கலைக்கழகம்.

**முதல்பிரதியை பெற்றுக்கொள்பவர் மற்றும் சிறப்புரை**
**திரு.ஏ.வெற்றியழகன்,** நிதி நிர்வாகி, பச்சையப்பன் அறக்கட்டளை.

கருத்தரங்கின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்த உரை
**பேராசிரியர். ச. மாதவன்,** நெப்ராஸ்கா பல்கலைக்கழகம், அமெரிக்க ஐக்கிய நாடு.

**தலைமை விரிவுரை - பேராசிரியர். முத்து திருவேங்கடம், தைவான்.**

**தலைமை விரிவுரை - பேராசிரியர்.** எம். ஜெ. நஞ்சன், ஊட்டி.

இக்கருத்தரங்கு குறித்து **முனைவர். த.சேகர்,** கருத்தரங்கு செயலர் பின்வருமாறு கூறினார்.

200-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் இந்த கருத்தரங்கில் சமர்பிக்க படவுள்ளது. பல்வேறு கூறுகளைத்தாங்கியுள்ள ஆராய்ச்சி கட்டுரைகள் பல நிலைகளில் விவாதிக்கப்படும். 300க்கும் மேற்பட்ட அறிவியயல் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்கள் இந்திய துணைக்கண்டத்தின் பல வடமாநிலங்களிலிருந்து பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில், மருத்துவத் தாவரங்களின் பாதுகாப்பு, பயன்பாடு, மேம்படுத்தபட வேண்டிய கட்டாயம், ஆராய்ச்சிகளின் முக்கியத்துவம் குறித்த அறிவு, அறிஞர்கள், ஆய்வாளார்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளிடையே உள்ளது. அவை இக்கருத்தரங்கில் எடுத்துரைக்கப்படும் மேலும் கருத்து பரிமாற்றமும் நடைபெறும். இதனால் அனைவரும் பயன்படுவர்.

**பன்னாட்டு கருத்தரங்கின் பகுதிகள்:**

மருத்துவ தாவரங்களின் உயிர்பன்மயம் மற்றும் அதன் பாதுகாப்பு

இந்தியாவில் சுமார் 18000 வகை பூக்கும் தாவரங்கள் உள்ளன அவற்றுள் 8000 தாவர இனங்கள் இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளினால் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. மூலிகை மருத்துவம் இந்நாளில் மக்களால் அதிக அளவு பின்பற்றப்படுகின்றது ஏனெனில் ஆங்கில மருத்துவத்தின் பின் விளைவு குறித்து அனைவரும் உணர்ந்துள்ளனர். எனவே, மூலிகைத் தாவரங்களின் தேவை அதிகரித்து வருகின்றது. இந்த தேவையை இயற்கையிலுள்ள காடுகள் மூலம் நாம் ஈடுசெய்ய இயலாத நிலையுள்ளது. மூலிகைத் தாவரங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் வாழ்விடம் நாளுக்கு நான் குறைந்து வருகின்றது. அதனை பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையேல் அவை அழிந்து விடும்.

90%-க்கும் மேற்பட்ட மூலிகைத் தாவரங்கள் இயற்கையிலிருந்து பெறப்படுகின்றது. எனவே, அதன் மீதான தேவை மற்றும் அழியும் அபாயம் அதிகரித்துள்ளது. மூலிகைத் தாவரங்கள் நமக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமானால் அதன் பாதுகாப்பு மற்றும் சாகுபடி என்பது இன்றியமையாதவைகளாக உள்ளன. மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்பு என்பது ஒரு நீண்ட செயலாகும். அதற்கு பல ஆண்டு காலம் தேவைப்படும்

தாவர பாதுகாப்பில் தாவரங்களை அவற்றின் வாழ்விடத்திலேயே (In Situ) வைத்து பாதுகாக்கும் முறை மிகவும் எளியது மற்றும் நன்மை தரக்கூடியது.

**பாரம்பரிய மக்களால் பயன்படுத்தப்படும் மருத்துவத் தவாரங்கள் மருத்துவ முறைகள் மற்றும் மருத்துப் பொருளாக்கம்.**

பாரம்பரிய மக்களால் பயன்படுத்தப்படும் மருத்துவத் தாவரங்கள் மற்றும் மருத்துவ முறைகள் மிகவும் எளியவை அவை அம்மக்களின் அறிவு, அனுபவம் சார்ந்த சொத்தாகும். இம்முறைகள் மூலம் பல நோய்கள் பின் விளைவுகள் ஏதுமின்றி குணப்படுத்தப்படுகின்றன. பாரம்பரிய மக்களால் 400 மருத்துவத் தாவரங்கள், 3000 உணவுத்தாவரங்கள் 500 நார் தரும் தாவரங்கள் 400 கால்நடை தீவன தாவரங்கள், 300 சாயம் மற்றும் பசை தரும் தாவரங்கள் மற்றும் 100 வாசனை கூட்டு பொருள் தரும் தாவரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**உயிர்த்தொழில்நுட்பமும் மருத்துவத் தாவரங்களும்.**

உயிர்த்தொழில் நுட்பவியல் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறையாகும். இவற்றுள் முக்கியமான ஒரு பிரிவு மருத்துவ உயிர்த்தொழில் நுட்பவியலாகும். மருத்துவத் தாவர மேம்பாடு, புதிய மருந்துகளைக் கண்டறிதல் மற்றும் வகைப்படுத்துதலில் உயிர் தொழில் நுட்பவியல் முக்கியப்பங்கு வகிக்கின்றது.

மருத்துவத் தாவரங்களை விதை வங்கி, வாழ்விடத்திலேயே பாதுகாத்தல், மகரந்த வங்கி, டி.என்.ஏ வங்கி போன்ற பாதுகாப்பு முறைகள் மூலம் பாதுகாக்கலாம். அழியும் தருவாயில் உள்ள மருத்துவத் தாவரங்களை பாதுகாப்பதில் உயிர் தொழில்நுட்பவியல் முக்கியப் பங்கினை வகிக்கின்றது.

**மருந்துக்கூறியல் மற்றும் மருந்து உருவாக்கம்.**

சித்தமருத்துவம் ஆயுர்வேதமருத்துவம் மற்றும் சீன மருத்துவம் பல்வேறு மக்களால் பன்னெடுங்காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 119 மருந்துகள் இயற்கை மருத்துவ முறை அடிப்படையிலான அறிவின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்கில மருத்துவத்திற்கு இணையான மற்றும் மாற்று மருத்துவ முறைகளாக இயற்கை மருத்துவ முறைகள் திறம் பெற்றுள்ளது. இயற்கை மருத்துவ முறைகளினால் எண்ணற்ற நன்மை தரும் மருத்துப் பொருட்கள் பின்னாளில் கண்டுபிடிக்கப்படுவது திண்ணம்.

மூலிகை மருந்துப்பொருட்களின் தரக்கட்டுபாடு மற்றும் தரப்படுத்துதல்.

மூலிகை மருந்துப் பொருட்களில் தரப்படுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு என்பது மிகவும் இன்றியமையாதவைகளாகும். நோயை தீர்க்கும் மருந்துப் பொருட்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேதிப்பொருட்கள் உள்ளது. அவை தனியாகவோ அல்லது இணைந்தோ செயல்பட்டு மனித உடலின் பல நோய்களை கட்டுப்படுத்துகின்றது (அ) குணப்படுத்துகின்றது. இந்நாளி பல தரப்படுத்தப்பட்ட மருந்துப் பொருட்கள் இயற்கை முறை மூலம் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன.

## கலந்துகொள்ளும் அறிவியல் அறிஞர்கள்

**பேராசிரியர் :** **எஸ். மாதவன், நெப்ராஸ்கா பல்கலைக்கழகம்**
லிங்கோலின், நெப்ராஸ்கா, அமெரிக்க ஐக்கிய நாடு

**பேராசிரியர் :** **எஸ்.எஸ். தியோகுலே, பூனா பல்கலைக்கழம்**
பூனா, மகாராஷ்ட்ரா.

**பேராசிரியர் :** **எம்.ஜே. நஞ்சன், ஜே.எஸ்.எஸ். மருந்தியல் கல்லூரி,**
உதகமண்டலம், தமிழ்நாடு.

**பேராசிரியர் :** **ஆர்.ஆர்.ராவ், மருத்துவ மற்றும் வாசனை தாவரங்களின் மத்திய ஆராய்ச்சி நிறுவனம்,** பெங்களுர்.

**பேராசிரியர் :** **எஸ். சீனி, சத்யபாமா பல்கலைக்கழகம்,** சென்னை.

**பேராசிரியர் :** **பி.மேத்தா, எச்.ஜி.கௌர். பல்கலைக்கழகம், சாகோர்,**
மத்தியபிரதேசகம்.

**பேராசிரியர் :** **டி. வசந்தகுமார், இந்திய அழகுத்தாவர ஆராய்ச்சி மையம்,**
பெங்களுர்.

**பேராசிரியர் :** **டி.பரிமேலழகன், பாரதியார் பல்கலைக்கழகம்,** கோயம்புத்தூர்.

**பேராசிரியர் :** **அர்ச்சனா மேத்தா, எச்.எஸ். கௌர் பல்கலைக்கழகம்,**
சாகோர், மத்தியபிரதேசம்.

பேராசிரியர் : ஜி.பி.ராவ், கரும்பு ஆராய்ச்சி நிலையம், கன்ரகாட், கோரக்பூர், உத்தரப்பிரதேசம்.

பேராசிரியர் : பி.நாகராஜன், காட்டு மரபியல் மற்றும் மர வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.

பேராசிரியர் : டி. சுரேஷ் பாபுராஜ், மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சி குழுமம், நீலகிரி, தமிழ்நாடு.

திரு. பாலன் சாம்சன், இந்திய வனப்பணி, தமிழ்நாடு மேக்னசைட் லிட், தமிழ்நாடு அரசு, சேலம்.

பேராசிரியர் : எல். வீரகுமாரி, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

பேராசிரியர் : எம். திருநாவுக்கரசு, இன்ஸ்டிட்யூட் ஆப் மினரல்ஸ். & மெட்டீரியல்ஸ் டெக்னாலஜி, புவனேஷ்வர், ஒரிசா.

பேராசிரியர் : என். இராமன், சென்னை பல்கலைக்கழகம், கிண்டி வளாகம், சென்னை.

பேராசிரியர் : பி. இரவிச்சந்திரன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

பேராசிரியர் : ஆர். ஞானம், தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

பேராசிரியர் : எ. சங்கரன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி, சென்னை.

பேராசிரியர் : டி. நரசிம்மன், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.

**மேலும் விவரங்களுக்கு முனைவர் த.சேகர் - கருத்தரங்கு செயலர் அலைபேசி எண் : 9444350858 தொடர்பு கொள்ளவும்.**

பன்னாட்டு கருத்தரங்கு மூலம் ஏற்படும் நன்மைகள்:

மருத்துவத் தாவரங்களின் சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த முக்கியத்துவத்தை அனைவரும் அறிய ஏதுவாக அமையும்.

அறிவியலாளர்கள், மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள் மற்றும் அறிவுரைகள் மருத்துவத்தாவர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு புதிய கருத்துக்களை அறிந்து கொள்ள ஓர் வழியாக அமையும்.

மருத்துவத் தாவர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், மத்திய, மாநில அரசின் ஆராய்ச்சி நிலையங்கள், அறிவியளாலர்கள், மாணவர்கள் ஆகியோரை இணைத்து புதிய ஆராய்ச்சிகளை தொடங்க ஓர் வாயிலாக இக்கருத்தரங்கம் அமையும்.

மருத்துவத் தாவர சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட முறைகள் குறித்து விவசாயிகள் தெரிந்து கொள்ள வழிகோலும்.

நிறைவு விழா

**விழா நிறைவுரை: திரு. ஜி. பாலன் சாம்சன்**
**இந்திய வனப்பணி, சி.எம்.டி, டான்மேக், சேலம்.**

**சான்றிதழ்கள் வழங்குபவர்**
**திரு. டி. வீரப்பன்.**
**தலைமை நிர்வாகி,**
**சென்னை பிரிவு-II**
**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை.**

வெளியீடு, இயக்குநா
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9